காலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 29 திங்கட்கிழமை 15.12.2025 | அதிர்வு 138



## பேரிடர் முகாமைத்துவத்துக்கான விசேட தேசிய சபைக் கூட்டம் இன்று

பேரிடர் முகாமைத்துவத்துக்கான விசேட தேசிய சபைக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் 02

# எவரும் ஓடி ஒளியாதீர்; ஒன்றிணைந்து நாட்டை மீட்க முன்வாருங்கள்!

## ஜனாதிபதி அநுர அழைப்பு



இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தம், நிலைபேறாகவும் படிப்படியாகவும் வளர்ச்சியடைந்து வந்த பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எனினும், இத்தகைய சவாலை எதிர்கொள்வது ஒவ்வொருவரின் பொறுப்பு என்பதுடன், ஓடி ஒளிவதோ அல்லது அச்சத்துடன் பார்ப்பதோ அல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். 02

### பேரிடர் சவால்கள் தொடர்பில்

# நேரில் சந்தித்துப் பேச அனுமதி கோரி ஜனாதிபதிக்கு மனோ அவசர கடிதம்!

மலையகச் சமூகம் எதிர்கொள்ளும் அனர்த்த சவால்கள் குறித்து நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதியளிக்குமாறு கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கடிதம் அனுப்பியுள்ளார்.

தனது கடிதத்தின் ஆரம்பத்தில், “இந்த விதிவிலக்கான சவாலான தேசிய நெருக்கடி காலத்தில் உங்களின் தீர்க்கமான தலைமைத்துவத்தை நாங்கள் ஏற்றுப் பாராட்டுகிறோம்.” – என்று மனோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

“அண்மையில் ‘டித்வா’ அனர்த்தத்தால் கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தளை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, காணி உரிமை, வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் ஒப்பீட்டளவில் குறைந்த மற்றும் சில துறைகளில் எதிர்மறையான மனித அபிவிருத்தி சுட்டெண்களை மலையகச் சமூகம் தொடர்ந்து பதிவு செய்து வருகின்றது. 02






தேசிய மக்கள் சக்தி அரசின் ஆரம்பத்தில் சபாநாயகராக பதவியேற்று, பின்னர் தமது கலாநிதிப் பட்டம் தொடர்பான சர்ச்சையினால் அந்தப் பதவியை இழந்த நாடாளுமன்ற உறுப்பினர் அசோகா ரனவல இரண்டொரு தினங்களுக்கு முன்னர், தாம் செலுத்தி வந்த கார் விபத்துக்குள்ளானதை அடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கைதாகி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அது குறித்து நேற்று முன்தினம் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

விபத்து சமயம் அசோகா ரனவல மது போதையில் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்தும் அல்லது பரிசோதிக்கும் நடவடிக்கையை பொலிஸ் தரப்பு 02

# ஆபத்தான முறையில் மோ. சைக்கிள்களை செலுத்திய 18 இளைஞர்கள் மடக்கிப் பிடிப்பு!

ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களை ஓட்டிய 18 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹரகம – பன்னிப்பிட்டிய ஹைலெவல் வீதியில் நேற்று இவர்கள் மஹரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண பந்தயம் கட்டும் போது மேற்படி இளைஞர்கள் இதைச் செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட 11



மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு ஓட்டோவும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பில்மஹரகமபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

உரிய சமயத்தில் முன்னெடுக்காமல் வேண்டுமென்றே காலம் தாமதித்தது என்ற குற்றச்சாட்டு இருப்பது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

நான் குறிப்பிட்டபடி அந்த விடயம் இப்போது பூதாகரமாகி வருகிறது.

இந்த விபத்து பற்றிய விசாரணையை கையாண்ட சபுகஸ்கந்த பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி மேற்படி அசோகா ரனவலவிடம் அவர் போதையில் இருந்தாரா என்பதை அறிந்து கொள்வதற்கான மூச்சுப் பரிசோதனை உரிய சமயத்தில் செய்யத் தவறியமைக்காக அந்த அவருக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வுட்லர் தெரிவித்திருக்கிறார்.

விபத்தினால் ஏற்பட்ட காயங்கள், பின்னடைவுகளில் இருந்து அசோகா ரனவல மிக விரைவில் மீண்டும் விடுவார். ஆயினும் இந்த விபத்தை அடுத்து தொடர்ந்து நீடிக்க போகின்ற பொலிஸ் மற்றும் சட்ட விசாரணைகள் அவருக்குப் பெரிய நெருக்கடியாகத்தான் தொடரும் என்றே தோன்றுகின்றது.

* * *

இப்போது ஏற்பட்ட பேரிடரின் நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகள் தொடர்பில் அரசின் செயற்பாடுகளுக்கு எதிரான மோசமான விமர்சனங்கள் எதிர்கட்சிகள் தரப்பில் கிளம்பி வருகையில், இந்த ஆண்டு இறுதிக்கு முன்னர் நாடாளுமன்றைக் கூட்டி இந்த விவகாரங்களை பகிரங்கமாக விவாதிக்க ஆளும் தரப்பு விரும்பாது என்ற சாரப்பட என் கருத்தை சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் வைத்திருந்தேன்.

ஆளுந்தரப்பு விரும்பாவிட்டாலும் வருடம் முடிவதற்கிடையில் நாடாளுமன்றை கூட்டியாக வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டு விட்டதாக இப்போது தெரிகிறது. அதனால் வரும் 18ஆம் தேதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அரசு முன்வந்திருப்பது 'சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை' என்ற விடயத்தின் அடிப்படையில்தான்.

முடிவடைகின்ற ஆண்டுக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் அந்தந்த திட்டங்கள் நடைமுறைப்படுத் தப்படாமல் திறைசேரிக்கு திரும்பும் நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்படி திரும்பும் பெருவாரியான நிதியை அப்படியே அலேக்காக எடுத்து இடர் நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு செலவிடுவதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது.

அதனை செய்வதற்காலவே நாடாளுமன்றத்தை இப்போது அரசு உத்தியோகபூர்வமாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப் படாத நிதிகள் திரும்பும் நிலையில் அவற்றை உடனடியாக இடர் நிவாரணப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் தீர்மானம் ஒன்றை நாடாளுமன்றம் கூடிய கையோடு ஆளுந்தரப்பு நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பேரிடர்...

அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். பிரதமர் இணைத் தலைமை வகிப்பார்

2004 ஆம் ஆண்டு சுனாமியைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்கப் பேரிடர் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் இந்தச் சபை நிறுவப்பட்டது.

எனினும், அந்தச் சபையின் செயற்பாடு இயங்கா நிலையிலேயே இருந்து வந்தது.

எனவே , மேற்படி சட்டத்தில் சில திருத்தங்கள் தேவை என்றும், இது சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் விசேட கூட்டம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நாடாளுமன்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி கூடவுள்ளது.

இதன்போது டித்வா புயல் தொடர்பான நிவாரணப் பணிகளுக்குத் தேவையான அவசர நிதிக்கு ஒப்புதல் பெறப்படவுள்ளது.

ஆயிரம் பில்லியன் ரூபா கோரும் குறைநிரப்புப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது. இதற்கு எதிரணி முழு ஒத்துழைப்பை வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### நேரில் சந்தித்து...

இந்தச் சமூகத்துக்கான மீட்பு மற்றும் விரைவான புனர்நிர்மாணக் கட்டத்தில் வேறுபட்ட மற்றும் இலக்கு வைக்கப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகின்றது.

எனவே, இந்தச் சூழலில், தனித்துவமான இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒருங்கிணைந்த மற்றும் நிலையான கட்டமைப்பைப் பற்றி ஆலோசிக்க, மலையகச் சமூகத்தின் அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அவசர சந்திப்புக்கு நேரமொன்றை ஒதுக்கித்தர வேண்டும்." – என்றும் மனோ எம்.பி. தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

### எவரும் ஓடி...

திருகோணமலையில் நடைபெற்ற கடற்படையின் நிகழ்ச்சி ஒன்றின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான உறுதியுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, போதைப்பொருள் கடத்தலில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்த அச்சுறுத்தலில் இருந்து தாய் நாட்டைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.






# ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கத்திற்கு நேற்று வவுனியாவில் நினைவேந்தல் நிகழ்வு

(கி.வசந்தன்)

“தேசத்தின் குரல்” அன்ரன் பாலசிங்கத்தின் 19 ஆவது நினைவு தினம் வவுனியா திருநாவற்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பொதுமக்கள், நலன் விரும்பிகள், போராளிகஇன் குடும்பங்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கோட்டா வழியில் அநுரா?

இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற பதவி கிட்டத்தட்ட ஒரு முடியாட்சி அரசருக்குரிய அதிகாரங்களை கொண்டது என்ற மாதிரித்தான் கடந்த 47 ஆண்டுகளாக அது நடைமுறையில் இருந்து வருகின்றது.

2020 செப்டம்பரில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய அதிகாரிகளைப் பார்த்து, நாட்டு மக்களின் பொது நலனுக்காக தான் வாய்மொழி மூலமாகக் கொடுக்கும் உத்தரவுகளை அல்லது வழிகாட்டல்களை உத்தியோகபூர்வ சுற்றுநிருபங்களாக ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டுமென்று கூறியிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன. நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்களுக்காக ஜனாதிபதி செயலகம் அவ்வப்போது விடுக்கும் எழுத்து மூல சுற்றுநிருபங்களாக அவை கருதப்பட வேண்டும் என்பதையே அவர் அப்படிக் குறிப்பிட்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

அவரது கருத்து அப்போது ஊடகங்களில் வெளியாகி பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தி இருந்தது.

இப்போதும் இந்தப் பேரிடர் ஏற்பட்ட பின்னணியில் நிவாரண மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒட்டி, பாதிப்புற்ற இடங்களுக்குச் செல்லும் ஜனாதிபதி அந்தந்த இடங்களில் இருந்தவாறு அவ்வப்போது பிறப்பிக்கும் வாய்மூல உத்தரவுகள் அவ்வாறு எழுத்தில் எழுதப்படாத சுற்றுநிருபங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி அவதானிகள் மட்டத்தில் எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தப் பின்புலத்தில்தான் இதே விடயத்தை சர்ச்சைக்குரியதாக குறிப்பிட்டு கேள்வி எழுப்பி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

“பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக ஊடக காண்பிப்புகளை காட்டிய போதிலும், நிவாரணம் வழங்குவதற்கான எந்த சுற்றறிக்கைகளும் இன்னும் முறையாக வெளியிடப்படவில்லை.”- என்று அவர் கூறியிருக்கின்றார்.

“அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறையில் தற்போது பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்பும் தற்போதைய நிவாரண முன்னெடுப்புகளிலும் பல சிக்கல்கள் காணப்படுவது தெளிவாக தெரிகின்றது. இடர் முகாமைத்துவ துறையில் சேவையாற்றி வரும் அரச அதிகாரிகள் கூட இந்நேரத்தில் முறையான எந்தவொரு திட்டமும் இல்லை என்று தெரிவிக்கின்றனர். பல்வேறு தகுதிகளின் அடிப்படையில் நிதி நிவாரணம் பெற்றுத் தருவோம் என்று மக்களுக்கு வாக்குறுதிகளைவழங்கியிருந்தாலும், நிதி வழங்குவதற்கான எந்த வழிமுறைகளோ அல்லது சுற்றறிக்கைகளோ முறையாக வெளியிடப்படவில்லை. இந்த வழியில் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால், நாட்டிற்கும் மக்களுக்கும் கடவுளே துணை” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா நேற்று கம்பளையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் தெரிவித்திருக்கின்றார்.

அவர் குறிப்பிடுகின்ற விடயம் உண்மையானால் எதிர்காலத்தில் அப்பாவி அதிகாரிகள்தான் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

(கடைசியாக ஒரு வழியாக அனர்த்த நிவாரண நிதிக் கையாள்கை தொடர்பான புதிய வழிகாட்டுதல்கள் அடங்கிய சுற்றுநிரூபம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் தற்சமயம் வெளியிடப்பட்டுள்ளன எனப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.)

# ஒன்றாக முன்னோக்கி







# முத்தையன்கட்டு குளத்திற்கு நேரில் சென்று அதன் நிலைமைகள் தொடர்பில் கண்டறிவு

(விஜயரத்தினம் சரவணன்)

முத்தையன்கட்டுக் குளம் தொடர்பில் வெளியான சர்ச்சைக்குரிய தகவலையடுத்து வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று அங்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார்.

அத்தோடு வடமாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், நீர்பாசனப் பொறியியலாளர்கள், அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்தினர் உள்ளிட்ட தரப்பினருடன் கலந்துரையாடி நிலமைகள் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது முத்தையன்கட்டு குளம் உடைப்பெடுக்கும் அபாயத்திலிருப்பது தொடர்பாக வெளியான செய்திகளில் உண்மைத் தன்மைகள் இல்லை எனத் தெரிவித்த பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன், குளத்தின் நீரைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனத் தெரிவித்தார்.





# சீனா வழங்கிய 1,900 மீன்பிடி வலைகளும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்குக் கிட்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்



(கி.வசந்தன்)

சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1,900 மீன்பிடி வலைகளை மன்னார் மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு சீன அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்திற்கு ஜனாதிபதி நேரடியாக விஜயம் செய்து மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி இருந்தார். வடக்கு மாகாணத்தில் மன்னார் மாவட்டம் மிகவும் மோசமான நிலையில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டிருந்தது.

இடர் ஏற்பட்ட காலத்திலிருந்து மீனவர்களுடைய பிரதான கோரிக்கையாக, தங்களுக்கு வாழ்வாதாரம் வழங்கப்படவில்லை, தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதோடு மிகவும் துன்பியலுக்கு உட்பட்டதாக அவர்களுடைய முறைப்பாடு இருந்தது. இந்த கோரிக்கையை நான் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி இருந்தேன்.

கடந்த பத்து நாள்களுக்கு மேலாக மீனவர்கள் தொழிலுக்கு செல்ல முடியாமல் வீட்டிலேயே வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் இருக்கிக்றார்கள். அவர்களுக்கு உணவு தட்டுப்பாடு கூட இருக்கிறது எனத் தெரியப்படுத்தி இருந்தேன்.

ஜனாதிபதி மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற கிட்டத்தட்ட 12,000 மேற்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக இரண்டு வாரங்களுக்குரிய நிவாரணங்களை வழங்குவதாகத் தரிவித்தார். அதேபோல் வடக்கு மாகாண மீனவர்களுக்கும் இந்த நிவாரணம் வழங்கப்பட இருக்கின்றது.

அத்துடன் சேதமடைந்த படகுகளை திருத்துவதற்கும் ஏனைய மீன்பிடி உபகரணங்களை திருத்துவதற்கும் உரிய நிதியை விடுவிப்பதாகக் கூறப்பட்டது.

அது மட்டுமல்லாமல், சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1,900 மீன்பிடி வலைகளை மன்னார் மாவட்டத்தில் பயன்படுத்துவதற்கு சீன அரசாங்கத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதற்கும்மேலாகபாடசாலைமாணவர்களுடைய தரவுகள் சேகரிப்பதில் மந்த நிலை காணப்பட்டது. அது தொடர்பாக ஜனாதிபதி கடுமையான உத்தரவை அதிகாரிகளுக்கு வழங்கினார். வருகின்ற 31 ஆம் திகதிக்குள் பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் தலா 15,000 ரூபாய் ஆரம்பக் கொடுப்பனவாகக் கொடுத்து அவர்களுடைய கற்றல் உபகரணங்கள், பாடசாலை பைகள், சப்பாத்துக்கள், சீருடை போன்றவற்றை உடனடியாக கொள்வனவு செய்வதற்கு வழங்குமாறு கூறியிருக்கின்றார்.

விசேடமாக பாதைகள் முழுமையாக மோசமான நிலையை அடைந்திருக்கின்றன. வவுனியா, மன்னார் மாவட்டங்களில் குறிப்பாக செட்டிக்குளம் போன்ற பிரதேசங்களில் கூடுதலாக பாதைகள் புனரமைக்க வேண்டியிருக்கின்றது. அது தொடர்பாகவும் ஜனாதிபதி வினவி இருந்தார். உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற தரப்புகஆல் கோரிக்கைகள் விடப்பட்டன. உடனடியாக தற்காலிகமாக பாதைகளை இரண்டு வாரங்களுக்குள் அமைத்துக் கொடுக்குமாறும், நிரந்தர தீர்வாக அவர்களால் கோரிக்கை விடப்பட்ட நிதியினை விடுவிப்பதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட மிகவும் பிரதான பிரச்சினையாக காணப்பட்ட கால்நடை இழப்புகள். கிட்டத்தட்ட மன்னார் மாவட்டத்தில் 31,000 இற்கு மேல் கால்நடை இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதில் மிகவும் பிரதானமாக மாடுகள், ஆடுகள் இவை ஆயிரக் கணக்கில் இறந்துள்ளன. அவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாகவும் விரிவாகக் கருத்துரைக்கப்பட்டது.

இழப்புகளை வெவ்வேறு வகையாக பிரித்து ஒவ்வொரு வகையாக பாதிக்கப்பட்ட அனைவரையும் உள்வாங்கக் கூடிய வகையிலே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 70 குடும்பங்களின் வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ளன. இந்த 70 குடும்பங்களுக்கும் உடனடியாக காணிகளை இனங்காணுமாறு கூறப்பட்டுள்ளது.ஒருவாரத்துக்குள்ளேஅரசகாணிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு அந்த அரசு காணிகளில் குடியேறுவதற்காக தலா ஒவ்வொரு குடும்பத்துக்கும் 50 லட்சம் ரூபா வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளை ஜனாதிபதி பணித்திருக்கின்றார்.

செட்டிக்குளம் பிரதேசத்தினுடைய கந்நசாமி நகர், மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட மடுக்கரை மற்றும் கூராய் போன்ற இடங்களில் மீள மக்கள் குடியேற முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வகையான கிராமங்களில் மழைக்காலங்களில் தொடர்ச்சியாக வெள்ளப் பிரச்சனை ஏற்படுவதால் இவர்களை மீளவும் வேறு இடங்களில் காணிகளை இனம் கண்டு உடனடியாக குடியமத்தக்கூடிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் வன இலாகா திணைக்களம், அரசாங்க அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் விரைவாக அந்த காணிகளை இனம் கண்டு அந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்தக் கூடிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட மக்களினுடைய கோரிக்கையை ஜனாதிபதி ஏற்று எந்தவித கோரிக்கைக்கும் மறுப்பு தெரிவிக்காமல் பதில் தந்துள்ளார். முழுமையான ஒரு காத்திரமான ஒரு கூட்டமாக மன்னார் கூட்டம் இருந்தது.

வீதிகளுக்கான நிதி மாகாணத்தின் ஊடாக விடுவிப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீதிகளுக்கு இவ்வருடம் மேலதிக நிதி வழங்குவதற்குரிய வாய்ப்புகள் உள்ளன. அதற்காக வருகின்ற 18 ,19 ஆம் திகதிகளில் விசேட நாடாளுமன்ற அமர்வு நடைபெற இருக்கின்றது

எங்களுடைய அரசாங்கத்தை பொறுத்த வரையில் மக்களுடைய அரசாங்கம் என்ற வகையில் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை காலமும் எந்த அரசாங்கமும் செய்யாத அளவில் நிவாரணப் பணிகளை அள்ளி நாங்கள் வழங்கி இருக்கின்றோம். நிச்சயமாக அந்த மக்களுக்கு அது ஒரு காத்திரமான விடயமாக இருக்கும். எதிர்வரும் காலங்களில் தொடர்ச்சியாக அவர்களை கைவிடாமல் கண்காணித்து அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு நாங்கள் தீர்மானித்திருக்கின்றோம்.

அது மட்டுமல்லாமல் இயந்திர உபகரணங்கள் பற்றாக்குறை பிரதேச சபைகளுக்கும், உள்ளூராட்சி நிர்வாகங்களுக்கும் காணப்படுகின்றது. அந்த இயந்திரங்களை ஏற்கனவே கொள்வனவு செய்யப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இயந்திரங்களை குறிப்பாக உள்ளூராட்சி சபைகளுக்கு உட்பட்ட பிரதேச சபைகளுக்கு வவுனியா, மன்னார் பிரதேச சபைகளுக்கு வழங்குவதற்கும் முன்னுரிமை வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருக்கின்றார். இதன் மூலமாக இந்த கிராமிய வீதிகளை விரைவுபடுத்தி அமைப்பதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும்.

வவுனியா மாவட்டத்தில் குறிப்பாக செட்டிக்குளம், நெடுங்கேணி அதே போல நகர்ப்புறத்தில் திருநாவற்குளம் ஏனைய தரணிக்குளம் ,கல்மடு பூம்புகார் போன்ற பிரதேசங்கள் கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த பிரதேசங்களிலும் எங்களுடைய அரசாங்

தொடர்ச்சி▼

# சீனா வழங்கிய 1,900 மீன்பிடி வலைகளும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்குக் கிட்டும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்

தொடர்ச்சி▲

கம் கூடுதல் கவனத்தை செலுத்த இருக்கின்றது.

இவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்ற 25,000 ரூபா கொடுப்பனவை விரைவுபடுத்தி இந்த வாரத்துக்குள் வழங்கி வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் மேலதிகமாக இதில் இனம் காணப்பட்ட முழுமையாக வீடுகளில் உள்ள பாத்திரங்கள், தளபாடங்கள் அழிவடைந்த குடும்பங்களுக்கும் மேலதிகமாக 50,000 ரூபா கொடுப்பனவுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

நெற்பயிர் தவிர தானியங்கள், வீட்டு தோட்டங்கள் என்பவற்றின் அழிவுக்கு இழப்பீடு வழங்குவதில்லை என்ற குறைப்பாடு இருந்தது. அதை நாங்கள் சுட்டிக்காட்டி இருந்தோம். எனவே அவர்களுக்கும் அந்த இழப்பீடுகளை வழங்குவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த தகவல்களை விரைவுபடுத்தி அனைத்தையும் இரண்டு வாரங்களுக்குள் தகவல்களை சேகரித்து உடனடியாக சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டிருக்கின்றது.

இதில் நான் முக்கியமான ஒரு விடயத்தை கூற வேண்டும். இந்த வெள்ள அனர்த்தத்தின் போது இரவு பகல் பாராது பணியாற்றிய அரச அதிகாரிகள், இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினர் விசேடமாக இந்த விடயங்களை வெளிக்கொணர்ந்த ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள், அதேபோல் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், இளைஞர் குழுவினர் அனைவருக்கும் நன்றிகள்.

விசேடமாக மன்னார் மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் அநுராதபுரம் மாவட்டத்தில் இருந்து கிட்டத்தட்ட 300 பேருக்கு மேல் தொண்டர் அடிப்படையிலே இரண்டு நாள்கள் வந்து வீடுகளை கிணறுகளை கழுவுவதிலும் பாடசாலைகளை சுத்தம் செய்வதிலும் சகோதரத்துவத்துடன் இங்கு செயல்பட்டு இருந்தார்கள். எந்த ஒரு அரசாங்க காலத்திலும் நடக்காத சிறப்பான ஒரு விடயமாக மக்களால் இந்த விடயம் கருதப்படுகின்றது.

நிச்சயமாக இதன் மூலமாக மக்களினுடைய அந்நியோனியமும் இடர் காலங்களிலே இடர் மக்களுக்கு உதவுகின்ற ஒரு மனிதநேய பண்பும் எங்கள் மக்கள் மத்தியிலே வளர்ந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

அவர்கள் அனைவருக்கும் அரசாங்கம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். – எனத் தெரிவித்தார்.

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதியிடம் விசாரணை



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவிடம் வாக்குமூலம் பெறப்பட உள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடந்த நேரத்தில் இரா ணுவப் புலனாய்வு பிரிவின் செயல்பாடு மற்றும் பொறுப்புகளைப் பிரிப்பது தொடர்பான பல உண்மைகளைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.

இந்த விசாரணைகள் தொடர்பாக கடந்த வாரம் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவிடமிருந்தும் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பெற்றது.

மேலதிகமாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த பிரதி பொலிஸ் மா அதிபரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

# சு.கவின் சட்ட மோதல்களுக்குத் தீர்வு சிரேஷ்ட பிரதி தலைவராக விஜயதாஸ

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷவை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவராக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட இந்த நியமனம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வரவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷவுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து கட்சி தொடர்பான நீண்டகால சட்ட மோதல்கள் தீர்க்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்வின் ஒரு பகுதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தொடர்புடைய ஆறு நீதிமன்ற வழக்குகளை விஜயதாஸ ராஜபக்ஷ மீள பெற்றுள்ளார்.

கட்சியின் எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரலை ஆதரிக்க அவர் அழைக்கப்பட்டுள்ளார் எனக் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.














# வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் நிவாரணம் மலையகத்தில் விநியோகம்

சமீபத்திய வெள்ள அனர்த்தத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பு (நேசுமு) மூலம் திரட்டப்பட்ட உலர் உணவுப் பொதிகள், நுவரெலியா மாவட்டம் மற்றும் கண்டி மாவட்டத்தின் கம்பளை பகுதிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நேற்றும் முன்தினமும் விநியோகிக்கப்பட்டன.

இந்த விநியோக நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்விடயம் தொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

வெள்ளத்திற்குப் பிறகு உடனடியாக நமது கட்சியின் பொதுச் செயலாளர்

தொடர்ச்சி▼
















# வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் நிவாரணம் மலையகத்தில் விநியோகம்

தொடர்ச்சி▲

சுமந்திரனுடன் நேரில் சென்று நாம் இந்தப் பகுதிகளைப் பார்வையிட்ட போது, அனைத்தையும் இழந்த குடும்பங்களின் கவலைகளை நேரில் கேட்டறிந்தோம். அப்போது நிவாரண உதவிகளுடன் மீண்டும் வருவோம் என்று வாக்குறுதி அளித்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் ஒரு பகுதியாகவே இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உதவி என்பது பார்வையிடல்களும் அறிக்கைகளும் மட்டுமாக இருக்கக் கூடாது. மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் தருணத்தில் அது அவர்களைச் சென்றடைய வேண்டும்.

இதனை சாத்தியமாக்குவதற்காக பங்களித்து அமைதியாக பணியாற்றிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள். – என்றார்.














# சப்புகஸ்கந்த ஓ.ஐ.சிக்கு எதிராக பொலிஸ் உள்ளக விசாரணை

சப்புகஸ்கந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக உள்ளக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வலவின் வாகனம் விபத்தின் பின்னர் பொலிஸார் செயற்பட்டமை தொடர்பாக இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதா, இல்லையா என்பதை விசாரித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சப்புகஸ்கந்த – தெனிமுல்ல சந்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல செலுத்திய ஜீப் வாகனம் கடந்த வியாழக் கிழமை மோட்டார் சைக்கிளில் மோதுண்டு பின்னர் எதிரே வந்த காரில் மோதி விபத்திற்குள்ளானது.

சம்பவத்தில் காரில் பயணித்த 6 மாத குழந்தை மற்றும் 02 பெண்கள் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக வீதி விபத்தை தடுக்கத் தவறியமை, கவனக்குறைவாக வாகனத்தை செலுத்தியமை, காயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

# மழை தொடர்வதால் மண்சரிவு அபாயம் நீடிப்பு: முக்கிய மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை



தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கைகள் குறித்து பொதுமக்கள் அதிக அவதானத்துடன் இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையின்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

இவற்றில் கண்டி மாவட்டத்தின் தொழுவ, கங்க இஹலகோரள, உடுதும்பர, மெததும்பர மற்றும் மினிப்பே ஆகிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும், குருணாகல் மாவட்டத்தின் ரிதீகம பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கும் மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை முதல் நாட்டின் பல பகுதிகளில் மழை நிலைமை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதனால் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



# அனர்த்தத்தால் மின்சார சபைக்கு 20,000 மில்லியன் ரூபா இழப்பு

அனர்த்தங்களால் ஏற்பட்ட பாதிப்புகளினால், இலங்கை மின்சார சபைக்கு 20,000 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன், வீடுகளை இழந்த பல மின்சார நுகர்வோர் இருப்பதாகவும், தடைப்பட்ட அனைத்து மின்மாற்றி அமைப்புகளும் மீண்டும் வழமைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தடைப்பட்ட மின்சார விநியோகத்தில் 99 சதவீதம் மீண்டும் வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேரிடர் காரணமாக நாடு முழுவதும் 4.1 மில்லியன் மின்சாரத் தடைகள் ஏற்பட்டிருந்ததாகவும் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.



# மரக்கறி விலையில் அதிரடி மாற்றங்கள்

பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ள விலைப்பட்டியல்கள் வெளியாகியுள்ளன.

அதன்படி, நுவரெலிய மற்றும் யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையங்களின் விலைப்பட்டியல்களில் நேற்று மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

அதற்கமைய, யாழ்ப்பாணத்தில் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ கிராம் கோவா, நுவரெலியாவில் 210 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ கிராம் போஞ்சி, 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

நுவரெலியாவில் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் ஒரு கிலோ கிராம் கரட், யாழ்ப்பாணத்தில் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிலோகிராம் தக்காளி யாழ்ப்பாணத்தில் 450 ரூபாவுக்கும், நுவரெலியாவில் 300 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

நுவரெலியாவில் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் லீக்ஸ், யாழ்ப்பாணத்தில் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.




# இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு மருந்துப் பொருள்கள் நன்கொடை

இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் நன்கொடையாகக் கிடைத்துள்ளன.

17 அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மற்றும் 14,200 கிலோகிராமுக்கும் அதிகமான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய இந்தத் தொகுதி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்திய உதவி உயர்ஸ்தானிகரால் சுகாதார அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க இந்த நன்கொடை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனர்த்த நிவாரண நிதிகள் வினியோகம்: மாவட்டச் செயலாளர்களுக்கு வழிகாட்டல்

அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரண நிதிகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பான புதிய வழிகாட்டுதல்களைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

இந்த வழிகாட்டுதல்கள் நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சு ஆகியவற்றிலிருந்து வழிகாட்டுதல்களுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நிவாரணம் வழங்குவதில் ஈடுபட்டுள்ள தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்புகளை இந்த வழிகாட்டுதல்கள் குறிப்பிடுவதுடன், பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் உதவிகளையும் விரிவாக சுட்டிக்காட்டியுள்ளன.

# அனர்த்தத்தால் 437 பாரிய வணிகங்கள் பாதிப்பு; விபரங்களை அறிவிக்க தொலைபேசி இலக்கம்

அதிதீவிர வானிலை காரணமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள 13,698 வணிக செயற்பாடுகள் குறித்த தரவுகள் கைத்தொழில் பேரிடர் ஆதரவு மையத்திற்கு இதுவரை கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 5,639 நுண் அளவிலான வணிகங்களும், 4,636 சிறு அளவிலான வணிகங்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.



அத்துடன், 2,986 நடுத்தர அளவிலான வணிகங்களும், 437 பாரிய அளவிலான அளவிலான வணிகங்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, பாதிப்புக்குள்ளாகியுள்ள வணிகங்கள் தொடர்பில், 0712 66 66 60 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்புகொண்டு அறிவிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# நாளை முதல் மழை அதிகரிக்கும்: 6 மாகாணங்களுக்கு எச்சரிக்கை

நாளை 16 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் மழையுடன் கூடிய வானிலையின் தாக்கம் ஓரளவு அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான பாதுகாப்பு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

# இலங்கையின் புனரமைப்புக்கு இந்தியா தலைமையேற்க வேண்டும்

## மிலிந்த மொரகொட முன்மொழிவு

அனர்த்தத்துக்கு பின்னரான இலங்கையின் புனரமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்க வேண்டும் என பாத்ஃபைண்டர் அறக்கட்டளையின் நிறுவுனரும் இந்தியாவுக்கான முன்னாள் உயர்ஸ்தானிகருமான மிலிந்த மொரகொட முன்மொழிந்துள்ளார்.

அண்மையில் புது டெல்லிக்கு விஜயம் செய்த மிலிந்த மொரகொட, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், வெளிவிவகார செயலாளர் விக்ரம் மிஸ்ரி உள்ளிட்ட பலருடன் சந்திப்புகளை மேற்கொண்டார்.

அத்துடன், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில், 4 ஆவது இந்தியா – ஜப்பான் மன்றத்திலும் அவர் பங்கேற்றார்.

இந்திய மற்றும் ஜப்பானியத் தலைவர்கள் இருதரப்பு மற்றும் மூலோபாய பங்காண்மைகளின் எதிர்காலத்தை கலந்துரையாடி வடிவமைக்கும் தளமாக இந்த மன்றம் விளங்குகிறது.



இந்தநிலையில், இந்தியா – ஜப்பான் மன்றத்தில் மிலிந்த மொரகொட அளித்த தனது சமர்ப்பிப்பில், அனர்த்தத்துக்கு பிந்தைய இலங்கையின் புனரமைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா தலைமை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த முயற்சியில் ஜப்பானை ஒரு வியூகப் பங்காளராகச் சேர்க்க வேண்டும் என்றும் மிலிந்த மொரகொட முன்மொழிந்தார்.

இந்த மன்றத்தில், பொருளாதாரப் பாதுகாப்பு, வர்த்தகம், அணுசக்தி, டிஜிட்டல்மயமாக்கல், மூலோபாய கனிமங்கள் மற்றும் முதலீடு உட்பட இந்தியா – ஜப்பான் ஒத்துழைப்பு தொடர்பான பல்வேறு முக்கியப் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் வெல்வோமென்ற அமித் ஷாவின் கருத்தை பொருட்படுத்தாமல் கடக்க முடியாது

## திருமாவளவன் தெரிவிப்பு



"தமிழகத்தில் வெற்றி பெறுவோம் என்று அமித் ஷா முழங்குகிறார். அவர் எப்படி அதனைச் சொல்கிறார் என்று யோசிக்க வேண்டும். அதனை பொருட்படுத்தாமல் கடந்து செல்ல முடியாது."

– இவ்வாறு வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப் பட்டி அருகே முன்னாள் அமைச்சர் பி. பழனியப்பன் இல்லத்திருமண விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த விழாவில் பங்கேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பேசுகையில்,

"தருமபுரி பகுதியில் தி.மு.க. கூட்டணி எந்தளவுக்கு வலுவாக உள்ளது என்பதற்கு நாடாளுமன்ற தேர்தல் வெற்றியே சாட்சி. மீண்டும் அந்த வெற்றியை உறுதி செய்யவேண்டும்.அதே போல் தமிழ் மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும். ஆனால் இதனை தடுக்க சிலர் சதி செய்கின்றனர்.

அமித் ஷா, தமிழகத்தில் வெற்றி பெறுவோம் என்று முழங்குகிறார். அவர் எப்படி அதனை சொல்கிறார் என்று நினைக்க வேண்டும். அதனை பொருட்படுத்தாமல் கடந்து செல்ல முடியாது. அவர் ஏற்கனவே பிஹாரில் சொல்லியது போல் வெற்றி பெற்றனர். கேரளாவில் மாநகராட்சியை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளனர். அக்கட்சிக்கு வாக்குச்சாவடி முகவர் இல்லை, கட்சி கட்டமைப்பு இல்லை. ஆனாலும் முழங்குகிறார். பீகார் போல் வாக்கு திருட்டு முறையில் தமிழகத்திலும் வெற்றி பெற நினைக்கிறார்.

தி.மு.க. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் கட்டமைப்பு வைத்துள்ளது. இந்தியாவில் எந்த கட்சிக்கும் இந்த கட்டமைப்பில்லை. கடந்த தேர்தலில் முதல்வர் அவர்களின் சதிகளை முறியடித்தார். இந்த தேர்தலிலும் ஒற்றுமையாக செயல்பட்டு நாம் முறியடிக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள சர்வே கல்லை வைத்து, நீதித்துறையை வளைத்து, காவல் துறை, அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு வரவழைத்துள்ளனர். இதற்கெல்லாம் அச்சப் படாமல், துணிச்சலாக முதல்வர் உள்ளார்.

தமிழ்நாட்டை காக்க அதிகார கும்பலை தடுக்க கூட்டணிக் கட்சியினர் ஒருங்கிணைந்து களப்பணியாற்ற வேண்டும்."– என்றார்.

# தவறான ஆட்சியை தேர்ந்தெடுத்த பொதுமக்களே அதற்குப் பொறுப்பு

## சீமான் கூறுகின்றார்



தமிழகத்தில் நடக்கும் தவறான ஆட்சிக்கு ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும் என, மதுரையில் சீமான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இருந்து ஈரோடு செல்ல விமானம் மூலம் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மதுரை சென்றார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழக அரசு ஊழியர்கள் பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தற்போது போராட்டம் நடத்துகின்றனர்.

இக்கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. அவர்கள் கேட்பது நியாயமான கோரிக்கைகள் தான். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இது போன்ற போராட்டத்தில் மு.க.ஸ்டாலின் பங்கேற்றிருக்கிறார். நான் அரசு ஊழியர்கள் போராட்டத்துக்கு ஆதரவளித்து பங்கேற்கிறேன். ஓய்வூதியத்துக்குப் பயந்து பணி நிரந்தரம் செய்யாமல் ஆசிரியர்களை ஒப்பந்தம், பகுதி நேர பணியில் வைத்துள்ளனர்.

அரசு நிர்வாகத்தை முறையாக செயல்படுத்தவில்லை. ஓய்வு பெறும் வயது 58 இல் இருந்து 60 ஆக அதிகரித்தது ஏன். ஓய்வு பெற்றவுடன் ஓய்வூதியம் கொடுக்க உங்களிடம் நிதியில்லை. இது போன்ற சூழலில் படித்த இளைஞர்கள் அரசு வேலைக்கு போக முடியவில்லை. அரசுப் பணியென எதுவுமின்றி எல்லாவற்றையும் தனியார் முதலாளிகளிடம் ஒப்பந்தம் கொடுத்துள்ளனர். தூய்மைப் பணிகளும் தனியார் முதலாளிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது அரசு தான். தனியார் முதலாளிகள் லாபமின்றி எதையும் செய்வதில்லை. தமிழகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள ஆந்திரா முதலாளிகளுக்கு என்ன ஆசையா?

தமிழக போக்குவரத்து தொழிலாளர்களிடம் பிடித்த தொகை 7500 கோடி இந்திய ரூபா என்ன ஆனது. இதைக் கேட்டு எத்தனை முறை போராடினார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது, நாங்கள் வந்தவுடன் நிறைவேற்றுவோம் எனச் சொல்கிறீர்கள். ஆளுங்கட்சியாக வந்தபிறகு தூக்கி தூரப் போடுகிறீர்கள். தவறான ஆட்சி நடக்குது என்றால் அதற்கு ஆட்சியாளர் பொறுப்பல்ல. ஆட்சியாளரை தேர்ந்தெடுத்த மக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

கேரள மாநில உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ்/ம், கொம்யூனிஸ்ட்டும் அதிக இடங்களை வென்று இருந்தாலும், நம்ம ஊர் அரசியலைப் பேசவேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.



# சென்னையில் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் இல்லை என்றால் அபராதம்

செல்லப்பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளதாக சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெறாதவர்களுக்கு இன்று முதல் இந்திய மதிப்பில் 5,000 ரூபா அபராதம் விதிக்கப்படும் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று ஒரே நாளில் மட்டும் 2,930 செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

சென்னையில் இதுவரை 59,308 செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதல் வீடு வீடாகச் சென்று செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெறப்பட்டதா என ஆய்வு செய்யப்படும் எனவும் சென்னை மாநகராட்சி சார்பில் பூங்கா, வீதிகள் உள்ளிட்ட பொது இடங்களில் ஆய்வு நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அவுஸ்திரேலியாவின் சிட்னி கடற்கரையில் தீவிரவாத தாக்குதலில் 11 பேர் உயிரிழப்பு

அவுஸ்திரேலியாவின் சிட்னி கடற்கரையில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 11 யூதர்கள் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட ஒருவர் உயிரிழந்தார்.

இஸ்ரேலின் ஜெருசலேமில் உள்ள ஆலயத்தை மறுஅர்ப்பணம் செய்ததைக் குறிக்கும் வகையில், 'ஹனுக்கா' திருவிழாவை யூதர்கள் ஆண்டுதோறும் கொண்டாடுகின்றனர். அந்த வகையில், ஒரு வாரம் நடைபெறும் ஹனுக்கா திருவிழா நேற்று தொடங்கியது. இதையொட்டி, அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள போண்டி கடற்கரையில் குழந்தைகள், பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கான யூதர்கள் கூடியிருந்தனர்.

இந்நிலையில், மாலை 6.40 மணி அளவில் அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர், பொதுமக்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளனர். பீதியடைந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். பொலிஸார் விரைந்து சென்று, மர்ம நபர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். இதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு நபர் படுகாயங்களுடன் பிடிபட்டார்.

மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 29 பேர் படுகாயம் அடைந்தனர். இதுகுறித்து நியூ சவுத்வேல்ஸ் பொலிஸ் உயர் அதிகாரி கிறிஸ் மின்ஸ் கூறும்போது,

"இது பல மாதங்களாக திட்டமிட்டு நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல். யூதர்களை குறிவைத்து நடந்த இந்த தாக்குதலில் 2 பேர் ஈடுபட்டுள்ளனர். இதில் ஒருவர் பாகிஸ்தானைச் சேர்ந்த நவீத் அக்ரம் (வயது 24) என்று தெரிய வந்துள்ளது. வேறு யாராவது இந்த தாக்குதலில் ஈடுபட்டார்களா என விசாரித்து வருகிறோம்." என்றார்.

இதற்கிடையே, கடற்கரையில் உள்ள வாகன நிறுத்தப் பகுதியில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை நடத்தினர். அங்கு வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் தீவிரவாத தாக்குதலில் உயிர் தப்பிய ஒருவர், ஹனுக்கா திருவிழாவை கொண்டாட குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார். நேற்றைய தாக்குதலில் அவரும் காயமடைந்தார். இந்த தாக்குதலுக்கு உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





# துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கவலை

அவுஸ்திரேலிய துப்பாக்கிச்சூட்டின் போது சாதுரியமாகச் செயற்பட்டவரை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பாராட்டியுள்ளார்.

இதனிடையே இந்த தாக்குதல் குறித்து தனது கவலையையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

பலஸ்தீன அரசுக்கு அவுஸ்திரேலியா அளிக்கும் ஆதரவு யூத-எதிர்ப்பு வாதத்தைத் தூண்டும் என்று அவுஸ்திரேலிய பிரதமரிடம் 4 மாதங்களுக்கு முன்பே எச்சரித்ததாக நெதன்யாகு குறிப்பிட்டார்.

நெதன்யாகு இந்த துப்பாக்கிச் சூட்டை “கொடூரமான படுகொலை” என்று குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கைகள் யூத-எதிர்ப்பு வாதத்தை ஊக்குவிப்பதாகவும், தூண்டுவதாகவும் உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

பலஸ்தீன அரசுக்கான உங்கள் அழைப்பு தீயில் எண்ணெய் ஊற்றுவது போல் உள்ளது என நெதன்யாகு அவுஸ்திரேலியாவை விமர்சித்துள்ளார்.

இது ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு வெகுமதி அளிக்கிறது.

இது அவுஸ்திரேலிய யூதர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்களைத் தைரியப்படுத்துகிறது, மேலும் உங்கள் வீதிகளில் பின்தொடரும் யூத வெறுப்பை ஊக்குவிக்கிறது” என்று நெதன்யாகு கூறினார்.

அவுஸ்திரேலியாவில் யூத-எதிர்ப்பு வாதம் பரவுவதைத் தடுக்க அல்பானீஸின் அரசாங்கம் “எதுவும் செய்யவில்லை” என்று நெதன்யாகு குற்றம் சாட்டியுள்ளார்.




# அவுஸ்திரேலிய துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் போது துணிச்சலால் பல உயிர்களைக் காப்பாற்றிய ‘ஹீரோ’

அவுஸ்திரேலியாவில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் போது துணிச்சலாக செயற்பட்ட அந்நாட்டு பொதுமகன் ஒருவருக்கு பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

அவர் அவுஸ்திரேலியாவை கடந்து உலகளவில் ஹீரோவாக திகழ்கிறார் என பலரும் கூறி வருகின்றனர்.

அவரது துணிச்சலான செயலுக்கு அவுஸ்திரேலிய பிரதமரும் பாராட்டியுள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களில் ஒருவரை தடுத்து அவரை கீழே வீழ்த்தி மேலும் பலரின் உயிர்களும் பறிபோகாமல் காப்பாற்றியுள்ளார் பழக்கடை வியாபாரியான ஹமட் எல் அஹமட்.

43 வயதான அவர் இரண்டு குழந்தைகளின் தந்தை என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

துரதிஷ்டவசமாக இரண்டாவது துப்பாக்கிதாரியால் அவர் இரண்டு முறை சுடப்பட்டார்.

அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவர் குணமடைவார் என்று அதிகாரிகள் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் -15.12.2025




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதற்றத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது. எனவே பணத்தைக் கையாளும்போது கூடுதல் கவனம் தேவை.

இன்று ஆரோக்கியமாய் இருக்க நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -15.12.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களைவிட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல் திறனுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும்.சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டுக்கு உகந்த நேரம்.

இன்று உங்கள் ஆற்றலும் உறுதியும் அதிகரித்து காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# கொழும்பு கடலில் மசகு எண்ணெய் கசிவு



கொழும்பு துறைமுகத்தில் ஒரு கப்பல் மசகு எண்ணெயை இறக்கிக் கொண்டிருந்தபோது, விநியோகக் குழாயில் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பகுதியில் கடல்நீரில் எரிபொருள் கலந்திருப்பது காணப்பட்டது.

இலங்கை கடலோர காவல்படை மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை இணைந்து மாசுபட்ட நீரை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.